DINAMALAR

4 JULY 2022

PAGE 1

# 'கியூட்' தேர்வுக்கு விண்ணப்பிக்க 10ம் தேதி வரை அவகாசம் நீட்டிப்பு

**புதுச்சேரி, ஜூலை 4–**

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் முதுநிலை படிப்புகளில் சேர்வதற்கான 'கியூட்' தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான அவகாசம், வரும் 10ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் உள்ள முதுநிலை படிப்புகள், டிப்ளமோ படிப்புகளுக்கான இடங்கள் தேசிய தேர்வு முகமை நடத்தும் 'கியூட்' தேர்வு மூலம் நிரப்பப்பட உள்ளது.

விருப்பம் உள்ள மாணவர்கள் https://cuet.nta.in என்ற இணையதளத்தில், ஜூன் 18ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டு இருந்தது.

அதன் பிறகு விண்ணப்பிக்க காலக்கெடுவை ஜூலை 4ம் தேதி மாலை 5.00 மணி நீட்டித்து தேசிய தேர்வு முகமை உத்தரவிட்டது.

இந்த வாய்ப்பினை பயன்படுத்தி புதுச்சேரி பல்கலைக் கழகத்திற்கு மாணவ, மாணவிகள் விண்ணப்பித்து வருகின்றனர்.

இந்நிலையில் கியூட் தேர்வுக்கு விண்ணப்பிக்க, வரும் 10ம் தேதி மாலை 5.00 மணி வரை காலக்கெடுவை மூன்றாவது முறையாக நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

விண்ணப்ப கட்டணத்தை 11ம் தேதி இரவு 11.50 மணி வரை செலுத்த வேண்டும்.

விண்ணப்ப படிவத்தில் திருத்தங்களை 12ம் தேதி முதல் 14ம் தேதி வரை இரவு 11.50 மணி வரை செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் குறிப்பேட்டினை www.pondiuni.edu.in என்ற இணையதளத்தில் டவுண்லோடு செய்து கொள்ளலாம்.